சகல விதமான பள்ளிக்கூடப் புஸ்தகங்களுக்கும், இதர நூல்களுக்கும் உபகரணங்களுக்கும் உன்னதமான நிலையம்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 19/300 of 1939

இந்துசாதனம்

செவ்வாய், வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்,
முசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

வெளிவந்துவிட்டது ... ... வெளிவந்துவிட்டது
"ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும்"
ஆக்கியோன்:
உடு. V. M. சாமுத்திரசிங்கம் B.A.
நான்காம், ஐந்தாம் வகுப்புகளுக்குரியது
விலை ரூபா 1.
எல்லாப் புத்தகசாலைகளிலும், சைவப்பிரகாச யந்திரசாலையிலும் பெறற்பாலது.
[Std, 46. 2-4—30-4-49.]

[புத்—கூ०] யாழ்ப்பாணம்:— சர்வதாரி வரு பங்குனி மீ கூ உ (1949 மார்ச் 25 வெள்ளிக்கிழமை) [இல.—கூடு]

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் திகதி ஆரம்பமானது.

சைவ சமய நுண்மை

சென்ற 13-3-49 ல் கொழும்பு ஸிக்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரார்த்தனைக் கூட்டத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் முக்கியமான "சைவசமய நுண்மை" என்னும் பொருள்பற்றிய 'இக்கேள்வியும் பதிலும்', திரு. கே. வீ. எம். சுந்தரர், திரு. ரீ. எம். பழனிவேலு ஆகிய இருவராலும் நிகழ்த்தப்பெற்றது. கொழும்பு ரேடியோவில் அஞ்சல் செய்யப்பட்ட அப் பேச்சினைக் கீழே தருகின்றோம்.

(முற்றொடர்)

கேள்வி: ஓகோ, வடமொழியும் தென்மொழியும் இரண்டு கண்கள் போன்றவை என்றால் சமக்கு இரண்டுதேவதைான,

பதில்: 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதும், "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதும் தமிழரின் சிறந்த பண்பு ஆனதால் இந்துமத உண்மையைப்பற்றி ஆராயும்பொழுது குறுகிய மொழிப்பற்றுக்களைக் கொண்டு வரக்கூடாது.

கேள்வி: நம் சமய உண்மைகளைப்பற்றச் சிந்திக்கும் பொழுது குறுகிய மொழிப்பற்று குறுகிடக் கூடாதுதான.

பதில்: தெற்கேயுள்ள நாள்கடலால் கொள்ளப்பட்ட போது அதன் பிரதிநிதியை வடமொழி நூல்கள் தாராளமாகமுடையஉண்மையை உணர்ந்துவைவதுகாகும். வேதாகமங்களை தமிழில் வேதாந்தம் என்றும், சிவதமநிராம என்றும், வேதாந்திராம என்றும், சைவ சித்தாந்தம் என்றும் சொல்லுவதுண்டு. இவற்றிலே மேலாயுமானவர் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தாண்டவே" என்று பாடியருளினார்.

கேள்வி: நான் இதுவரை வேதாந்தம் தமழுக்குரியதல்லவென்றும் சித்தாந்தம் தமழுக்கு குரியது என்றுமல்லவோ எண்ணியிருந்துவிட்டேன். இப்பொழுதுதான் வேதாந்தம், சித்தாந்தம் இரண்டுமே சைவ சமய நூல்களென்று அறிந்தேன்.

பதில்: எப்படி சைவசித்தாந்திகளை போன்றமனிதர்கள் இருக்கின்றார்களோ அதேபோன்று, போலி வேதாந்திகளும் உண்டு. ஆனால் மனிதர்களுடைய குறைபாடுகளை உண்மை உலகுக்கு நூல்களின்மேல் சுமத்தப்பெறுவது பெரிய தவறாகும்.

கேள்வி: அது தவறுதான் என்று நானும் விளங்கிக்கொண்டேன். தாங்கள் சற்றுமுன் உலகத்திலுள்ள இதர சமயங்களில் சொல்லியிருக்கின்ற உண்மைகள் எல்லாம் சைவ சமயம் தனிடத்தே அடக்கியிருக்கிறதென்றும், சைவ சமயத்தில் சொல்லியிருக்கின்ற விடயங்கள் இதர சமயங்களில் சொல்லப்பெறவில்லை என்றும் துணிந்து சொன்னீர்களே. அதற்குக் காரணம் யாதோ?

பதில்: இதர சமயங்களில் சொல்லியிருக்கும் உண்மைகள் ஒவ்வொன்று ஒவ்வொரு விதமாக இருந்தாலும், அவை ஒவ்வொன்றையும் கற்றறிந்த சைவசமயத்தவன், காரணம் கண்டு ஒப்புக்கொள்கிறான். அவற்றில் வெளியிடாத உண்மைகளை சைவசமயத்தில் காரண காரியங்கூறி, நாட்சிப் பிரமாணமாக நிரூபித்திருக்கின்ற மேன்மையையும் கணணுக்காண்கின்றான். ஆனதினாலே உண்மையான சைவசித்தாந்திக்கு எம்மதமும் சம்மதம் என்ற மனப்பான்மையும், ஈசுவர சமயத்தின் ஒப்புயர்வற்ற மேன்மையும் கண்கு புலனாகும்.

கேள்வி: அதனால்தான் எத்தனை இந்துக்கள் பிறசமயம் புகுந்தாலும் நம்மவர்கள் மௌனம் சாதிக்கின்றார்களோ!

பதில்: மனிதருக்கு அந்தவகையில் இந்துக்கள் கொடுத்திருக்கிற சுதந்திரம் வேறு ஒரு சமயத்தவரும் இதுவரை கொடுக்கவில்லை.

கேள்வி: நம்மவர்கள் பிற சமயத்திற்குப் போகத்தான் சுதந்திரம் கொடுத்திருக்கிறார்களே தவிர, போனவர் திரும்பவும் வருவதற்குச் சுதந்திரம் கொடுத்திருப்பதாக இல்லையே.

பதில்: முன்னர் அப்படியில்லாமலிருந்தது. இப்பொழுது போகவும் வரவும் ஒரே சுதந்திரமதான் தாய்நாடாகிய இந்தியாவில் கொடுத்திருக்கிறார்கள். சேய் நாடாகிய இலங்கையிலும் விரைவில் கொடுத்துவிடுவார்கள் என்றுதான் தெரிகின்றது.

கேள்வி: சைவ சமயத்தில் மற்றைமேலா வெளியிடாத நுண்மை என்ன [illegible] சிறந்து [illegible] மகாகவி [illegible] நம்மவர்களுக்கு [illegible] பயன் [illegible] என்று [illegible]

பதில்: [illegible] சிறந்தவன். [illegible] நிறுவனர் 14 வரியில் [illegible] அறிவு [illegible] துன்ன ஒழுக்கம், ஒழுக்கு, [illegible] அறம் [illegible] இன்பம் ஆகிய சுவைகளையும் புகுத்து 1330 அருள் குறளாகவே உலகத்திற்குக் கொடுத்திருக்கிறார். அதனை நமக்குச் சொல்லாத உண்மைகள் எந்த நூலிலும் கிடையாது. எந்த நூலிலும் அதன் உள்ள உண்மைகள் கிடைக்கமாட்டா.

கேள்வி: திருக்குறளை சமணர்கள் செய்த நூல் என்றல்லவோ சிலர் சொல்லுகிறார்கள்.

பதில்: இல்லை, இல்லை; சமணர்களுக்கு கடவுள் வழிபாடு கிடையாது, திருக்குறளில் முதல் அதிகாரம் "கடவுள் வழிபாடு" — அதில் பத்தாவது குறள் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்—நீந்தார் இறைவனடி சேர்ந்தார்" என்று இறைவனடி சேரும்வரை பிறவி உண்டென்றும், கடவுளடி சேர்ந்தவர்களுக்குப் பிறவி கிடையாதென்றும் சொல்லியிருப்பது சைவ சமயத்திற்கே ஏற்பட்ட நுண்மை.

கேள்வி: உண்மையா? நுண்மையா?

பதில்: நுண்மை என்ற சொல் ஆழ்ந்த கருத்துக்களைப் பொதிந்து கொண்டிருக்கின்றது என்று குறிக்கும்.

கேள்வி: பௌத்தர்களும் மறுபிறவி உண்டென்றுதானே சொல்லுகிறார்கள். வினை உண்டு என்றும் வினைகருத்தக்க பிறவி உண்டு என்றும், வினையினாலே பிறவி கிடையாது என்றும், நிர்வாணநிலையடைவதாம் என்றும்தானே சொல்லுகிறார்கள்.

பதில்: புத்தர் பெருமான் இக்தமத சீர்திருத்தத்திற்காகவே பிறந்த ஒரு சிறந்த இந்து சமயவிளவர். இறந்தவர்களுக்குத் திதி அல்லது விரார்த்தம் கொடுக்கிறார் அவர்கள் திருப்தி படைவதுபோல தேவர்களுக்கும் வேள்வி செய்தால் சில சித்திகள் பெறலாம் என்று சிலர் செய்த கொடிய கொலைச் செயல்களை விலக்குவதற்காக அவதரித்த அந்த மஹான் ஜீவகாருண்யத்தையும் அறிமிசையையும், நிலைநாட்டி, நம்முடைய வினைதான் எல்லாப் பிறவிகளுக்கும் மூலகாரணம் என்று வற்புறுத்தினார்.

கேள்வி: சைவசமயமும் அப்படித்தானே சொல்லுகிறது?

பதில்: இல்லவே இல்லை. நுணுக்கவனிக்கவேண்டும். நம்முடைய வினைகளை அதாவது மனதினால் நினைப்பவற்றை, வாயினால் சொல்பவற்றை, உடலினால் செய்பவற்றை பிற மனிதர்கள் பாராதிருந்தாலும் ஒன்றும் பிசகாமல் பதிவுசெய்து அவற்றின் நியாய விசாரணை முடித்து, அதற்குத் தக்க பரிகாரமாக பிறவி கொடுக்கும் வல்லமையுள்ள ஆண்டவனாகிய நியாய அதிபதிதான் உலகத்திற்கும் சிவராசிகளுக்கும், அண்டங்களுக்கும் கோளங்களுக்கும் மூலகாரணன் என்று முடிவுசித்தாந்த கூறுவதே நம்முடைய சைவசமயத்தின் நுண்மை,

கேள்வி: அப்படியானால் புத்தர்கள், வினைதானே பிறவியைக் கொடுக்குமென்று சொல்லுகிறார்களே!

பதில்: ஆமாம், ஒருவிதத்திற்கு மேல் விலாசம் எழுதி தபாலபெட்டியில் போட்டுவிட்டக், அக்கடிதம் விலாசதாருக்குப் போய்ச்சேருவதுபோல, நாம் செய்கிற வினைகளுக்குப் பலன் கொடுக்கும் என்கிறார்கள்.

கேள்வி: அதுவும் சரிதானே ஐயா!

பதில்: அதுஎப்படிச் சரியாகும். தபால்பெட்டியில் போட்ட கடிதத்தை எடுத்து, ஊர்வாரியாகப் பிரித்து, மாகாண இடங்களுக்கு அனுப்பி அவர்களுடைய விலாசதாருக்குக் கொண்டு சேர்க்க அதிகாரிகள் இல்லாதபோனால், மேலதிகாரம் எழுதப்பெற்ற கடிதம், தானே போய்ச் சேர்ந்துவிடுமா?

கேள்வி: தானே போய்ச் சேராதுதான்.

பதில்: கோட்டில் நியாய விசாரணை செய்ய அதிகாரிகளும், அவர்கள் செய்த தீர்ப்பை நிறைவேற்றக்கூடிய அதிகாரிகளும் இல்லாவிட்டால் நாம நம்முடைய குறைபாடுகளையும், பிறர் செய்யக் அநியாயங்களையும் எப்படி நிவிர்த்தி செய்துகொள்ள முடியாதோ அதேபோல நியாய அதிகாரியாகிய கடவுள் ஒருவர் நியாயத் தீர்ப்புச் செய்யாவிட்டால் உலகத்தில் தருமம் குறைந்து அதர்மம் மேலிட்டுவிடும். வினைகள், தாமே தீர்ப்புச் செய்ய முடியாது. நம்முடைய வினைகளுக்குத்தக்கதீர்ப்புச்செய்கிறவன் கருணைக் கடலாகிய ஆண்டவனே என்று உணரவேண்டும்.

கேள்வி: அப்படிப்பட்ட ஆண்டவனும் அவனுடைய உதவியும், வேண்டாமென்று புத்தர்கள் சொல்லுகிறார்கள்?

பதில்: ஆமாம். அதனால் தான் "கடவுள் வழிபாடு" நிரம்பப்பெற்ற இந்தியாவில் வினையை ஒப்புக்கொண்டு, வினைக்குத் தக்கநியாயம்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாடு

சித்திரை 23 -ல் லண்டனில் நடைபெறும்

சாம்ராஜ்ய கட்பாட்சி நாடுகளின் பிரதமர்கள் வருகிற சித்திரை 23 -ம் திகதி லண்டனில் கூடி, பத்து நாள் வரை அங்கு நடைபெறவிருக்கும் மகாநாட்டில் கலந்துகொள்வார்கள். மகாநாட்டில் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்படும் விஷயங்களில் அவசிய கற்பாது காப்பும், ஸாசியலமைப்புத் திட்டமும் முக்கிய இடம் பெறும்.

இந்தியா, கனடா, கவுஸ்திரேலியா, நியூஸிலந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை, பிரித்தானியா முதலிய நாடுகள் இம் மகா நாட்டில் கலந்துகொள்ளும். இந்தியா, தனது பிரதமர் மூலமாக, சென்ற வருஷம் ஜூப்பிலியில் நடைபெற்ற மகாநாட்டில் முக்கியத்துவம் பெற்றது. இப்பொழுது நடைபெறப்போகும் இம் மகாநாட்டிலும் இந்தியா மற்றைய நாடுகளுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

இந்திய அரசியல் பிரகடனம் செய்ததன் பிரகாரம், இந்தியா மிக விரைவில் தன்னைச் சுதந்திர ஜனநாயக ராட்சத அமைதிக்கு கொள்ளும். அதனால், சாம்ராஜ்ய நாடுகளின் கவனம் முழுவதும் இந்தியாவினால் கவரப்பட்டுளது. தூரகிழக்கு நாடுகளின் பாதுகாப்பு முழுவதும், இந்தியாவின் கடைசி தீர்மானத்தைப் பொறுத்திருக்கிறது.

இந்திப் பிரதமர் பண்டித நேரு சித்திரை மாத மூன்றும் வாரத்தில் லண்டனுக்குப் புறப்படுவார் என நம்பத்தகுந்த செய்திகள்கிடைத்துள்ளன.

இலங்கைப் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக அவர்கள் சித்திரை 16 -ம் திகதிவரையில் லண்டனுக்குப் புறப்படுவார். தற்பாதுகாப்புவெளி நாட்டு விவகார மந்திரிசபையின் நிரந்தரக் காரியதரிசி திரு கே. வைத்தியநாதனும், பிரதமருடைய அந்தரங்கக் காரியதரிசி திரு. அத்துக்கோறளையும் பிரதமருடன் செல்வார்கள். பிரதமர் சுமார் தூரடு வாரங்கள் வரை லண்டனில் தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் திரு. லியாகத் அலியான அவர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவர் தாம் லண்டன் செல்வது பற்றி முடிவான அபிப்பிராயம் ஏதும் சொல்லவில்லை.

வட்டுக்கோட்டையில் கொலை

ஒருவர் பாதுகாவலில் வைக்கப்பட்டார்

வட்டுக்கோட்டையில், சென்ற திங்கட்கிழமை இரவு ஒரு வேலையன் கொலை செய்யப்பட்ட செய்தி வட்டுக்கோட்டையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. யாழ் பாண மாபொலிஸ் அதிகாரியும், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிகாரியும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று விசாரணைசெய்து, கிடைத்த சாட்சியங்களைப் பதிவுசெய்து கொண்டார்கள். யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதியும் அவரது பிரசன்னமாயிருந்தார்.

மிகச்சாதாரணமாகத் தோன்றும் வேலை ஒன்று செய்யும் எட்டின் குணாதிகளை என்னும் தொழிலாளி, கிளாட்டனின்முன் ஒருவிட்டியின்சாராணியப்புச்சம்பவம் தமாகச் சில வேலைகள் செய்வதற்காக வந்தாராம். அன்றிரவு அவர் அங்கு படுத்துறங்குகிறபோது, தடியால் அடித்துக் கொலை செய்யப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. சந்தேகத்தின் பேரில் கே. கந்தையா என்பவரை 26 -ம் தேதி வரை பாதுகாவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

தோத்திரம்

என்றுமரு ணேசன் இருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்—சென்று
திரிந்தேன் பலமருந்து தின்றுசில காலம்
இருந்தேன் இராமலிருந் தேன்.

அண்ணாமலைப் பெருமானுடைய திருவடிகளை நம்பாதவர்கள், எங்களும் (கவத்தொன்றும் சக்தியாகினென்றும் எண்ணிக்கொண்டு) மலைகளிலும் காடுகளிலும் மலைக் குகைகளிலும் போய்ச் சஞ்சரிப்பர் காலம் (தேடித்து) வாழ்வதேன்? (அவர்கள்) இறந்தபின்னர் அடையும் பயன்றான் என்ன? என்பது கருத்து.

அண்ணாமலைப் பெருமானுடைய திருவடிகளை தமக்குத் துணையென்ற நம்பிக்கை யில்லாதவர் (தாம் துறவிகள் எனத் தமை மதித்துக் கொண்டு) மலை காடு மலைக்குகை முதலிய இடங்களிற் சென்று சஞ்சரிப்பதனாலும், காயகல்ப்பம் முதலிய மருந்துகளை உட்கொண்டு நம தேகத்தைத் நிடமாக்கி ஆயுளை நீட்ட முயல்வதனாலும் அவர்கள் இறப்பதனாலும் எவ்வகையான பயனுமில்லை யென்றபடி. என் என்றவினா எனன பயன் என்ற கருத்தில் வந்துள்ளது, இராமலிருந்தல் இங்கே இறந்தொழிதல் என்னுங் கருத்தில் வந்தது. (33)

அஞ்சலி

[கவியரசர், நாகூர் எழுதிய கீதாஞ்சலியிலிருந்து தமிழில் தருபவர் திரு. சோ. சண்முகபாரதி]

"ஊர்மனையில், இல்லம் இல்லமாக அன்று இரந்துவந்தேன், தேவரீருடைய பொற்றேர், தூரத்தே அலங்காரமாக ஊர்ந்து வந்து சொப்பனம்போல் அதிசயிக்கச் செய்தது. 'யார் இந்த மன்னர் மன்னன்' என்று சற்றுச் சிந்தித்தேன். எனது பொல்லாத காலத்திற்கும் ஒரு முடிவு வந்ததென நம்பினேன். நம்பிக்கை உள்ளத்திற் பொங்கியது. கோடைமேல் பிச்சை போடப்படும், தெருப்புழுதியில் நான்கு நிக்கிலும் திரவியம் சிந்தப்படும் என்று பார்த்தவண்ணம் நின்றேன்.

"பொற்றேர் என்முன் நின்றது, தேவரீருடைய திருக்கண்ணோக்கம் எனமேல்பட்டது. அருமையிரிப்புடன் என்முன்வந்திர், கடைசியில் என்வாழ்வில் அதிஷ்டம் வந்ததை உணர்ந்தேன். சட்டென வலக்கையை நீட்டி 'எனக்கென்ன கொடுப்பாய்' என்றீர்.

"ஆகா! என்ன ஹாஸ்யம்! மன்னனின் ஹாஸ்யம் என்ன விந்தை! இரவலிடம் இரப்பதற்காய்க் கை நீட்டினீர்! செய்வதறியாதுநின்றேன். பிறகு பையிலிருந்த நெல் ஒன்றை மெதுவாக எடுத்துத் தேவரீரிடம் சமர்ப்பித்தேன். நான் முடிந்தது. நெல் பொதிந்த பையைக் கவிழ்த்து அள்ளினேன். உள்ளத்தில் அதிசயம் எல்லை கடந்து எழுந்தது. இந்த நெற்குவியலிலே, நிறைய பொன் நெலலொன்று மின்னிற்று. நெல் முழுவதையும் தேவரீருக்குத்தந்து விடவிலையே என்று விமலி விம்மி அழுதேன்."

திருக்கேதீசுவர ஆலயத் தருப்பணிச் சபை

மேற்படி சபையின் நிறைவேற்றுக் கமிட்டியின் கூட்டம் ஒன்று பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவிலில் கூடியது. வழக்கறிஞர் திரு V. A. கந்தையா அவர்கள் தலைமையிலிருந்தார்கள். ஆலோசனைக் குட்பட்ட பல விஷயங்களுக்குள் திருக்கேதீசுவரத்தில் பள்ளிக் கூடம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மடக்கணக்கு மேலசெலவுகள், மடத்தின் எதிர்காலப் பரிபாலனம் ஆகிய விஷயங்கள் கருதப்பட்டன. திருக்கேதீசுவர பள்ளிக்கூடத்திற்கு உதவி செய்வதும், மடக்கணக்கின்மேல் செலவுகளைக் கொடுத்து முடிக்க பணம் சேர்க்கவும், மடத்திற்கு ஒரு பரிபாலனசபை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

திருக்கேதீசுவர ஆலயத்திருப்பணிச் சபையார் செய்யும்முயற்சியை ஆதரிப்பவர்களின் கூட்டம் ஒன்று வருகிற ஞாயிற்றுக்கிழமை (27-3-49) மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை மல்லைவர் சதுக்கண்டத்தில் நடைபெறுமென அறிகிறோம்.

யாழ்ப்பாணத்திற்கு சுதேசவைத்தியசாலை

அதில இல்லாகச் சித்த வைத்திய சங்கம் சுகாதார மந்திரி திரு. S. W. R. D. பண்டாரநாயக்காவைப் பேட்டிகண்டு சுதேச வைத்தியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை எடுத்துக் கூற, சமகத் நிலவர் வைத்தியர் கே. எஸ். பரிபூரணாந்தர்அவர்கள் நிலைமையில் அனுப்பியதருதுக்கோட்டிநிகு. பண்டாரநாயக்காவைக் கொழும்பில் பேட்டிகண்டது. அத்தருணம் மந்திரி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களும் பிரசன்னமாயிருந்தார். மந்திரி அவர்கள் சம்பாஷணையின்போது வைத்தியர்களைப் பதிவுசெய்யும் விஷயமாக மேற்படி சங்கத்தாரது கடிதமொன்றைப் பதிவுசெய்கிறதாகவும், இப்போது ஒரு சுதேச வைத்திய ஆஸ்பத்திரியை இப்பொழுதிருக்கும் அரசினர் ஆஸ்பத்திரியின் ஒரு கட்டிடத்தில் ஆரம்பித்து வைப்பதாகவும் கூறினார்.

தூரதிர்ஷ்டியினர் பல அரிய சித்தவைத்திய நூல்கள் செய்யுள் வடிவத்தில் எட்டு ரூபாய் இருப்பதாகவும், இத்தகைய நூல்கள் பல செல்லுக்கிரையாகின்றன என்றும், சித்தர்கள் முனிவர்கள் ஞான அனுபவத்தோடு தமிழில் பாடிய சித்த வைத்தியம் இன்றும் வேறெந்தப் பாஷையிலும் வெளிவரவில்லை யென்றும் கூறினர். மேலும் கொழும்பில் சித்த வைத்தியக்கல்லூரியில் ஆயுர்வேத ஆசிரியர்கள் படிப்பிப்பதால் சித்தவைத்தியம் முறையோடுகவனிக்கப்படவில்லை என்றும் கூறினர். பதிவு விஷயத்தில் வித்தியாசமாட்டாது தகுதியானவர்களை ஏரியிலில் பதிவும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. சுகாதார மந்திரி அவர்கள் தாம் வேண்டிய உதவிகளைக் எடுப்பதாக வாக்களித்தனர்.

அமெரிக்காவின் இந்தியத் தூதர் ஸ்ரீமதி பண்டிட்

ரஷ்யாவில் இந்திய எம்பாஸியராக இருக்கும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், சேர். பி. ராமராவுக்குப் பதிலாக அமெரிக்காவில் இந்தியத் தூதராக நியமிக்கப்படுவார் என நம்பத்தகுந்த செய்திகள் கிடைத்துள்ளன. அவரது நியமனம்பற்றிய அரசாங்க அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.

செலவுகளைக் கொடுத்து முடிக்க பணம் சேர்க்கவும், மடத்திற்கு ஒரு பரிபாலனசபை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்துசாதனம்

யாழ். சர்வதாரி ஞு பங்குனி மீ கூ உ வெள்ளிக்கிழமை

இலங்கைச் சர்வகலாசாலையில் சைவக் கோயில்

சென்றவாரம் கொழும்பு இராமகிருஷ்ண ஜயந்திவிழாக் கூட்டம் நடைபெற்றபோது, அக்கூட்டத்திலே தலைமைவகித்த இலங்கைச் சர்வகலாசாலைப் பிரதி உப அத்தியட்சகராகிய டக்ளர் மயில்வாகனமவர்கள் தாம் செய்த தலைமைப் பேருரையிற் பின்வருமாறு கூறியுள்ளார்:-

"பேராதனையில் அமைக்கப்படும் இலங்கைச் சர்வகலாசாலையிற் பயிலும் இந்துமாணவர், கடவுள் வழிபாடு செய்யும்பொருட்டு அக்கலாசாலைக்கு அணித்தாக இற்றைவரையின் ஒரு சைவ ஆலயம் அமைத்தற்காகிய முயற்சி யாதுஞ் செய்யப்படவில்லை; ஆனால் அங்கு ஒரு பௌத்த ஆலயத்தை அமைத்தற்கு 3 லட்சம் ரூபா சேர்க்கப்படலாயிற்று; சேர்ஜ் எனப்படும் ஒரு கிறீஸ்தவ ஆலயம் கட்டுதற்கும் அநுமதி உதவப்பட்டது"

டக்ளர் மயில்வாகனமவர்கள் கூறியவை நிசம்; சைவக் கோயில் மேற்படி சர்வகலாசாலைக் கணித்தாக அமைக்கப்படவில்லையே யென நமது டக்ளர் பரிவுகூர்தலும் முறையாகும்; இந்த இலங்கையிலுள்ள பிரதான சமயங்கள் நான்கு. பௌத்தம் சைவம் இஸ்லாமியம் கிறீஸ்துவம் என்னும் இந்நால்வகையான மார்க்கங்களை அநுசரிக்கும் மாணக்கர்களும் காலந்தோறும் வழிபடுதற்கு அந்த அந்த மதத்தினர்க்குரிய ஆலயங்கள் மேற்படி கலாசாலைக்கு அணித்தாக இருக்க வேண்டுமென்பது ஆவசியகமாம்; ஏன்? பொதுக்கல்வியோடு சமயக்கல்வி சமய ஆசாரம் தெய்வவழிபாடெனனு மிவைகள் மாணவரிடத்தில் ஒருங்கு வளரவேண்டு மென்பது அறிஞர்கொள்கை யாதலினாற்றான்; இல்லையேற் பொதுக்கல்வியானது கற்போர்க்குப் பெரிதும் பயன்படாது.

பௌத்தகோயில் பௌத்த மாணவர் வழிபாட்டின் பொருட்டு அமைக்கப்பட, கிறீஸ்தவகோயில் கிறீஸ்தவருள் கத்தோலிக்க கிறீஸ்தவர், புரோட்டஸ்தான் கிறீஸ்தவரென்னு மிருபகுதி மாணவருள் எப்பகுதியார் வணங்குதற்கென்பது அறியவேண்டியது; இந்துமாணவரைப்போலவே, மேற்படி கலாசாலைக் கணித்தாக இஸ்லாமிய மாணவர் வழிபாட்டிற்கும் ஒரு பள்ளிவாசல் அமைத்தற்காகிய முயற்சி இதுவரையில் இல்லையென்பது டக்ளர் மயில்வாகனமவர்கள் அன்று கூறிய கூற்றைக் கொண்டு அறியக்கிடக்கிறது.

இக்காலத்துள்ள கல்லூரிகள் கலாசாலைகள் எந்த எந்த மார்க்கத்தினரால் நிர்வகித்து நடத்தப்படுகின்றனவோ, அந்தந்தக் கல்லூரிகள் கலாசாலைகளுக்கணித்தாக அவ்வச் சமயத்தார்க்குரிய அவ்வச்சமயக் கோயில்களும் அமைந்திருப்பக் காணப்படுகின்றன; யாழ்ப்பாணத்துள்ள இந்துக்கல்லூரி, சைவமகளிர் கல்லூரி, பரமேசுவரக்கல்லூரி, இராமநாதன்கல்லூரிபோன்ற சைவக்கல்லூரிகளிலும், யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலை, சைவவித்தியாவிருத்திச் சங்கத்தார் நடத்திவரும பல கலாசாலைகள், தனித்த அதிபர்களால் நடத்தப்பெற்று வருங் கலாசாலைகள் பலவற்றிற் கணித்தாகவும் சைவ ஆலயங்கள் பெரும்பாலும் அமைந்துள்ளன; கல்லூரி கலாசாலைகட்குரிய கோயில்கள் இல்லாவிடத்தில், மாணவர் தங்கள் வித்தியாதாபனத்திற் கணித்தாகவுள்ள திருக்கோயிலில் விசேஷ தினங்களிலேனுஞ் சென்று வழிபாடு செய்து வருதலுமுண்டு; இந்தமுறை போற்றத்தக்கது. இப்படியான வித்தியா தாபனங்களுக்குரிய கோயில்கள் பலவற்றில் நித்தியபூசை விசேஷ ஆராதனைகள் விதிப்படி தாயமுறையில் நடைபெற, சில கல்லூரிகள் கலாசாலைகட்குரிய கோயில்களில் மாத்திரம் விதிப்படி தாயமுறையில் ஆராதனை வந்தனை வழிபாடு நடத்தவன்றி, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல், தவறான முறையில் வழிபாடு நேர்தல் கவலைக்கிடமாகும்; இச்செயல் கண்டித்துத் திருத்த வேண்டியது.

பேராதனையில் அமைக்கப்படும் சர்வகலாசாலையிற்படிக்க விருக்கும் சைவ மாணவர்கள் தெய்வவழிபாடு செய்தற்காகிய ஒரு சைவ ஆலயம் ஆவசியகம் அமைக்கப்படல் வேண்டும்; அங்ஙனம் அமைத்தற்காகிய பொருளுதவி முதலியவற்றை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரும் செய்ய வேண்டுமென்னுங் கருத்தமைந்த ஒரு வேண்டுகோள் இற்றைக்குப் பல மாசங்கட்கு முன்னர் இங்குள்ள சைவ பரிபாலன சபையார்க்குக் கொழும்பிலுள்ள ஒரு சைவசபையினரால் அனுப்பப்பட்டபோது, இச் சபை அவ்விஷயமாகக் கூடி பேசித்த ஞாபகம் இதனையெழுதுமடியேனுக்குண்டு. குறித்த ஆலயத்தைக் குறித்தஇடத்தில் அமைப்பதானால், அது ஆகம விதிப்படி அமைக்கப்படல் வேண்டுமென்றும், சிவாகம முறைப்படி நித்திய பூசை விசேஷ ஆராதனைகள் நடைபெறவேண்டுமென்றும், அவ்வாலயத்திற் சென்று வழிபட விரும்புவோர் ஆசாரசீலராய்க் கோயிலுக்குச் செல்லும்போது அணிய வேண்டிய முறைப்படி உடை தரித்தவராய், பயபக்தி யொழுக்கமுடையவராய்ப் போய் வணங்குதல் வேண்டுமென்றும், அங்ஙனஞ் செய்யாதவழி ஆலய வழிபாடு சிவத் துரோகமாய் முடியுமென்றுங் கருத்தமையயோசித்துத் தங்கள் பிரேரணையை மேற்படிகொழும்பிலுள்ள சபையார்க்கு அனுப்பினார்களென்ற ஞாபகமும் எமக்கு உண்டு.

இந்த விஷயத்தில் இங்குள்ள சைவ பரிபாலன சபையார் கொண்ட கொள்கை முறையானதெனலாம். திருக்கோயிலுக்குப் போகும்போது சட்டை தொப்பியிட்டுக்கொண்டும், பாதரட்சையிட்டுக்கொண்டும், தலையிலே துணி கட்டிக்கொண்டும், அழுக்கான உடை அணிந்துகொண்டும் இன்னபிற அனுசாரங்களோடும் ஆசௌசத்தோடும்ஒருபோதும் போகவொண்ணா தென்பது சைவசமய நெறியாகும்; பேராதனையில் தாபிக்கப்படவிருக்கும் சர்வகலாசாலையிற் கல்விகற்கவிருக்கும் மாணவர்கள் இப்படியான ஆசார ஒழுக்கங்களை அநுசரித்தலின்றிக்கோயிலுக்குத் தெய்வத்தை வழிபடப் போவரோ என்பதுதான் ஆசங்கைக்கிடமானது. மேலே சொல்லப்பட்ட ஆசார ஒழுக்கங்களை அநுசரித்தலின்றிக் கோயிலுக்குப் போதலைக்காட்டிலும், அங்குப் போகாது விடுத்து, ஆம் மாணக்கர் தாம் இருக்குமிடத்திற்றானே இயலுமானாற்சிவநாமத்தைச்சொல்லி விபூதி தரித்துத் தெய்வத்தைத் தியானித்து வணங்குவது நூறுமடங்கு உத்தமமாகும்; இதனை விடுத்துச் சைவஆலயங்களையும், அங்குக் கைக்கொள்ள வேண்டிய ஆசாரங்களையும், நடைபெறும் நித்திய நைமித்திகங்களையும் காலத்திற்குத் தக்க விதமாகப் பேதித்து விடலாமென எண்ணுவது அபத்தம்.

பேராதனைச் சர்வகலாசாலைச் சைவ மாணவர்கள் கடவுள் வழிபாடு செய்தற்கு ஒரு ஆலயம் வேண்டுமெனக் கண்டால், மேற்படி கல்லூரிக்கணித்தாகச் சைவ அபிமானிகள் சில பரப்புக் கொண்ட நிலத்தை வாங்கி, அதில் ஆகம விதிப்படி ஒரு திருக்கோயில் கட்டுவித்துப் பிரதிட்டை செய்து நித்திய நைமித்திகங்கள் விதிப்படி நடத்தற்காகிய ஒழுங்குகளை வகுத்து, அக்கோயிலில் மேற்படி கல்லூரிச்சைவமாணவர், உபாத்தியாயர் இன்னும் அயலிலேயுள்ள சைவ மக்கள் வேண்டிய காலந் தோறும் தூய முறையிற் சென்று வழிபாடு செய்தற்காகிய ஏற்பாடுகளைச் செய்தல்வேண்டும்; அஃதியலாதாயின், மேற்படி கல்லூரிநிற்றானே பஜனை மண்டபம் போன்ற ஒரு மண்டபத்தையமைத்து, இயன்ற ஆசாரத்தோடு மாணக்கர்கள் ஆசிரியர்கள் தெய்வத்தைச் சிந்திக்கவும், அருட்பாக்களைப் பாடித் துதிக்கவும், சமயப் பிரசங்கங்கள் செய்யவும் ஒழுங்குஞ் செய்தல்வேண்டும்; மேலே காட்டப்பட்ட அமைப்பில் எது சாலுமோ, அதனைச் சைவ மக்களேனும், சைவச் சபை சங்கங்களேனும் யோசித்து முயற்சி செய்து அமைத்தல் ஆவசியகமாம்.

— —

கமுத்துறைப் பட்டினத்தைச் சேர்ந்த நிறன் சொபன் என்னும் பெயருடைய ஒரு பொலீஸ், பட்டங்க் கரவலுக்குச் சென்றகிடத்து ஒரு கடையில் தேனீர் குடித்துவிட்டு, அக்கடையிலுள்ளவற்றுப்பேனுவையும் நிருடிக்கொண்டு போனானென்னும் குற்றத்தினமேல் விசாரணைசெய்து, குற்றவாளி யெனக் கண்டு ஒருநாட் சிறை விதிக்கப்பெற்றானாம்; குற்றத்தப்பாலில் தான் செய்தவறை ஒப்புக்கொண்டமையினாற்றான் அற்ப தண்டனை விதிக்கப்பெற்றானாம்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—34)

"அ" நினைத்தவனுக்குக் குளிரெல்ல கூதலெல்ல!"

கேசவனுக்குச் செய்வதென்னவென்று புலப்படவில்லை; பத்மா இப்படித் தனக்கு அபசாரஞ் செய்வாளென்று அவன் எள்ளளவும் எண்ணியிருக்கவில்லை; "இவளை வெறுத்திருந்த பாண்டியனுக்குஇவளைப்பற்றிச் சொல்லக்கூடிய கண்மைகளை யெல்லாஞ் சொல்லி, அவனை நம்பச்செய்து அவன் மனசைச் சமாதானப் படுத்திவிட்டு, இங்கே வர இப்படி மூடிந்தது! "ஆரியரசன் நிருடிய நாய்க்கு அங்கும் ஆடி இங்கும் இடி" என்றவாறு, இனி நான் பாஸ்கானிடமும் போக முடியாம லிருக்கிறேனே! பத்மா என்ன சொன்னாளாவது பாஸ்கான் என்னைக் கேட்டால், நான் என்ன பதில் சொல்லுவேன்! பெண்களுடைய சகவாசம் நல்லதல்ல என்று பெரியோர் சொல்லுவார்கள்; அது பொய்யெனநிரூபித்தேன் இதுவரையும்; மெய்யெனவுங் கண்டேன் இப்பொழுது. அங்கொருத்தி எவனோ ஒரு அன்னியனுடன் அரசமர நிழலிலே ஆர்வத்தோடு பேசிக்கொண்டு கிறங்குள; இங்கொருத்தி உடன் பிறந்தவள் போல் அன்பாக எனனுடன் ஊடாடியவள் இப்பொழுது காரணமொன்றுஞ் சொல்லாமல், விடுதேடி வந்த எனனைக் கண்டவுடனே கடிந்து சீறி மீண்டு வீட்டுட் புகுந்து கதவைப் பூட்டிவிட்டாள். இதுபோன்ற அவமானத்தை இதுவரை நான் பட்டதில்லை; ஆனாலுங் காரியமில்லை; பிறர் அறிந்த தக்தாய்ப் பட்டதுதான் பெரிய அவமானம்; நான் பட்ட அவமானத்தை என் மனமறியும்; பத்மா அறிவாள், தெய்வமறியும்; அல்லாமலும் அற நினைத்தவனுக்குக் குளிரானன, கூதலெனன! இனனும் எவ்வளவு சிரஞ் செனறாலும். நான் இந்த இடத்திற்றானே நின்று ஒரு முடிவு கண்டலலாமற் போவதுமல்ல" என்று நிடமபண்ணிக்கொண்டு கேசவன் அந்தத் தலைவாசலி லிருந்த ஒரு பலகைக் கட்டிலிற் போய்ருந்து கொண்டு பலவாறு நெடுநேரம் யோசித்தான்; கலல மேலீட்டினாலும் பசியினாலும் வழிநடந்த சிரமத்தினாலும் மனச் சோர்வினாலும் சரீரமுஞ் சோர, உறக்கமவர, அவன் தன்னையறியாமலே அந்தக் கட்டிலிற் படுத்துஉறங்கினான்.

பகற்காலத்தில் நித்திரையா?

இவனசெயல் இப்படியாக, கேசவனைச் சினந்து கதவையும் உட்பக்கத்தாற் பூட்டிவிட்டுத் தன் பதிக்கையறையுட் புகுந்த பத்மாவதி மன ஆறுதலோ டிருந்தாளல்லள், கேசவன் துக்கமாக எனனு மிரண்டும் பத்மாவதியின் உளளத்தை மாற மாற உபாதித்தன; "இந்த உலகத்திலேஇனிநான் இருந்தா லென்ன, இறந்தாலென்ன என்றெணணி ஆதரப்பட்டாள்; நான் சாதுரியமாக நொட்டு எணணிவந்த எணணமெல்லாம் இப்பொழுது மணணாயிற்றே பெற்றார் உற்றார் பெரியோர் சொற்கேட்டு நடப்பதைவிட்டு, நான் நினைத்தபடி நடக்கத் தலைப்பட்டமையினாற்றானே எனக்கு இந்த அநர்த்தங்க ளெல்லாம் கேரலையின்" என்று நினைத்து மனமடைந்தாள். "எணணறக் கற்றுஎழுதறற வாரிதறாலும் பெணபுதறபேயபுதறி யெனறறை நிசமாகவிட்டேன்" என்று சஞ்சலப்பட்டாள்; "என்ன, என்னைப் பொல்லாதகாலம் பிடித்துவிட்டதா? என மனநினை முறுகுய மாறவிட்டது பீப லிருக்கறசீர! மனஆறுதல மகழ்ச்சி யெனனு மிவைகள் குடிபெயரவிட. இப்பொழுது துயமும் கேயமும் சகசேகமுமா என துடைய உலமதநிற குடிகளாலவலயினி கால வித்தியாசத்தினுல மனமும மாறபடுமா? என மனம மாறபட்டுதானவிட்டது, மாறபடாவிட்டால, விடுதேடி எனகை கணணுமபடி வந்நீ கேசவனே வெறுதுச் சிறப்பே என்றுசொல்லி விட்டுக்கதவையும் பூட்டிக்கொண்டு வந்திருப்பேனா? நான என்ன பிழை துக்கொண்டு விட்டேனோ!" என்று இப்படித் தன்னையே தான் பலகேள்விகள் கேட்டாள்; "ஐயோ! என்ன மோசஞ் செய்துவிட்டேன்! கேசவன் இதுவரை எங்கே போனானோ! என்ன செய்தானோ! என்னைப்பற்றி என்ன நினைத்தானோ! நன்மை செய்தவனுக்குத் தீமை செய்துவிட்டேனோ! இப்படிச்செய்தது என அநுதாபத்தை நடிப்பினாற் றுளினோ" என்று எழிர்கலங்கொண்டு இருக்கைவிட் டெழுந்து மிரந்து நடக்துவந்து கதவைத் திறந்து தலைவாசலைப் பார்த்தாள்; கேசவன் அவ்வுளள பலகைக் கட்டிலில் அசைவற உறங்கிக் கிடப்பதைக் கண்டாள்; பரிவுகொண்டாள் பத்மாவதி; "கேசவன்! கேசவன்!! உறக்கமா? பகற் காலத்தில் இவ்வளவு அயர்வுக் கித்தலையா" என்று பரிவுடன் அவனைத் துயிலெழுப்புதலும், அதறகிடையல நடுக்குற்றெழுந்து கினறான கேசவன்.

"எனக்கே நிறம் வேண்டாம்"

எழுந்து கினறயன, எக்கத்துடன பத்மாவதியைப் பாரத்து, 'அம்மா, நீங்கள் சொனனவுடன் கூறத இடத்தை விட்டுப் போக விலலையே எனறு எனனைக் கோபிக்காதீரகள்; வழிநடந்த அலுப்பினாலும், இதுப் பகலுனிமாத வெயிலின அகிகாரஞ் சகக முடியாமலும், உடலை புறப்பட்டுப் போதலிடம் இந்த இடத்தில் எனனை மறபாமற படுத்துறங்கிவிட்டேன்; செய்த பிழையைப் பொறுத்துக் கொளளுவகள்" எனச்சொலலிவிட்டுப் போகப் புறப்படுததலும், பத்மாவதி அவனைப் பரிவுடன் பாரத்து "கேசவன், நான சறறு முந்திச் சொனனவைகள் முழுதுக தவறு; அவறறை யெணணிக் கவலைப்படாதே, என் கிற்றெரும், உத்தக் கட்டிலில் இரு" எனனும், "நான் இருக்கவிலலையம்மா,எணணிப்போக விட்டாற்போதும்; நீங்கள் போகச் சொன்ன வுடனே போயிருந்தால் இதுவரை முன்று நான்கு மைல் தூரம்போயிருப்பேன்; வெயில்முற்றுப்தணிந்து விட்டது; நான்போகிறேன்" என்று சொலலிப் போகக காலெடுத்தான் கேசவன்; "கேசவன், உன்னைப் போகவேண்டாமென்று நான தடுக்கவில்லை; நொற்றடிக்குப்போய் முகங் கால் கை சுத்திசெய்துகொணடு வந்து, தாகசாந்தி செய்துவிட்டுப் போகலாம்; அல்லாமலும்; நன்மையோ தீமையோ, வந்த நோக்கத்தைச் சொல்லிவிட்டுப் போ" என்று இதமாகச் சொனனாள் பத்மாவதி: 'அம்மா, நான் முங்காலகை சுத்திசெய்வதில்லை. எனக்குத் தாகமுமல்லை; வந்த நோக்கத்தை நான் சொல்லவுமல்லை; எனக்கு ஒன்றும் வேண்டாம் அம்மா, நான் போகிறன் என்றான்; "கேசவன், நான் செய்தது தவறு என்று ஒப்புக்கொண்ட பினனரும், நீ பிடிவாதஞ் செய்வது முறையல, உப்படியாகு" என்று பத்மாவதி மீளவுஞ்சொலல, "அம்மா, நீங்கள் முதல் இருக்க; பின் நான் இப்படி இருக்கிறேன்" என்று கேசவன் சிறிது ஆறதலோடு சொல்ல, பத்மாவதி அங்குள்ளகாற்காலியில் இருக்க, கேசவனும் கட்டிலிலிருக்கதான. "தாகத்திற்கு ஏதுங் கொணடு வருகிறேன்; தாகசாந்தி செய்துகொணடு போகலாமே, கேசவன்" எனறுபதமாவதிகேட்க, "இப்பொழுது ஒன்றும் வேண்டாம் அமமா, ஏதும சொல்லவேணடியிருநதாற் சொலலுங்கள்; கேட்டுக் கொண்டு நான போவதற்கு" என்றான கேசவன்.

பத்ம: கேசவன், நீ இன்று இங்கே வந்த நோக்கமென்ன?

தொடர்ச்சி 2-ம பக்கம்

உபதேச மொழி

"எங்களூரிலே மாட்டின்கழுத்தில் ஏர்மான கயிறை மாட்டி, அந்த மாட்டை மேயக கட்டேபடி, புலலுத தரைக்குக் கொணடு போம் போது, புஞ்சியுள்ள சல மாடுகளைக்கடுகுகடங்காமல், மேயக கட்டக கொணடு போபவனையும கயிற்றாடு இழுத்துக் கொணடு தான நினைத்தபடி ஓடுவதுணடு; அப்படியானவனிலையே, மேயக கட்டக கொணடு போபவன சில தூரத்திற்கு இழுவுண்டு போகும போது, புதியுளளவனு யருதால, அந்த மாக்கத்தில நிற்கும் ஒரு மரத்தில் தான பிடித்துளள கயிறை ஒரு சுறறுச் சுறறி மாட்டிய பிடித்துக் கொள்ள மாடு ஓடமுடியாமல தடைபட்டு மீணடு வருகறது. இல்லையபற சுமமா நிற்கிறது; அதுபோலவே பஞ்சப் புலனகள் தம வழிக்கு உளளத்தை யிழுக்க முயலுமபோது, புத்தியுளளவன பத்தியாகய கயிறை இறைவனடத்தில் மாட்டி வடுவானாயின அப்பஞ்சப் புலன்கள் தாம நினைத்த வழிக்கு அவனுடைய உளளத்தை இழுக்க மாட்டா".

—சலமாசங்கட்கு முன சமாதியுற்ற நயினாதீவுச் சாமியார்

இந்தியாவில் திரு. ஈடன்

திரு. ஈடன் டெல்லியில் பிரதமர் பண்டித நேருவைச் சநதித்துச் சுமார அரையணைநேரம வரை சமபாஷித்தார், திரு ஈடன் கவானர் ஜெனரல் ராஜாஜியையுஞ் சநதித்து, அவரோடு உணவருந்தினார். அங்கு பண்டிதநேரு, சாதா பட்டம், சேர் ஆசுபோலட லைக், கைசீமாட்டி முதலியோரும பிரசனனமாக இருந்தார்கள்.

கல்கத்தாவில் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

சர்வ கலாசாலை மூடப்பட்டது

சென்ற புதன்கிழமை போலிஸ் கொமிஷனரின அறிக்கை ஒன்றினை எழுத்துக் கல்கத்தா சர்வகலாசாலை மாணவரகள அணிவகுத்து ஊரவலம வந்தபோது, அவரகளைக் கலைத்தற்காகப் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகஞ் செய்தார்கள். பல மாணவரகள் சிறிய காயங்களுக்குட்பட்டார்கள். மாணவர்களின தலவரகளெனறு கருதப்பட்ட நாலகு மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள். சர்வ கலாசாலையும மூடப்பட்டு விட்டது. ஆசிரியரகளுக்குச் சமபளம உயரச்சி கோரியே மாணவர்கள் வேலைநிறுத்தமும் ஊரவலமும் நடத்தினார்களெனறு தெரியவருகிறது.

இந்தியத் தூதர்களுக்குப் புதுநமுநி

இநதிய பாராளு மன்றத்தில் நேறை புதன்கிழமை பண்டித்சிறு வேள் நாடுகளில இநதியாவின தூதாகளா யிருப்போர் அநுசரிக்க வேண்டிய சில லக்ஷயங்களை யிட்டுச் சொனனார். தூதாகள தாம கடுமாற்றமும சுற்றுபுடல விடு, விசேஷ உதிரவு பெறுக்கு கொளளமல, வெறிடங்களுக்குப் போவது தடுக்கபபட்டிருகறது. அவசிய காலங்களில மடடும அவரகள் வேண்டிய இடத்துக்குப் போகலாம். ஆனால, அற்றகுய வுயரகள் பினனுடு அநியது பெறறுகொளள வேணடும.

மதுரைப் பண்டித பரிட்சை

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித, பால பண்டித, பிரவேச பண்டித பரீட்சைகள வருகிற வரசி மாதம 4, 5, 6-ம திகதிகளில யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை — சாவகச்சேரியாசாச விநாயகர் மண்டபத்தில திரு. விநாயகர் உ. சுப்பையரின அலரகள் மேற்பாலையில் நடைபெறும் என அறிகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்கள் யாழ்ப்பாண சைவப்பிரகாச வித்தியாசாலை

நாவலரவர்கள் இவ்வித்தியாசாலையை ஸ்தாபித்து இரண்டாந் சர வருஷங்களின்முன் சிவத்த சிவ ஸ்ரீமுகவருஷமீ 5—உ சுக்கிர வாரமும் இரேவதி நக்ஷத்திரமும் கூடிய சுபநிகழ்தினமொன்றில் இன்று நூறு வருஷ பூர்த்திநிறைவுறுதற்படி சிறப்பாக நடத்தவேண்டுமென்று இதன் தருமபரிபாலகர்களும், அயலவர்களும், உபாத்தியாயர்களும், மறையை அபிமானிகளும் சில மாதங்களின்முன் முயற்சி செய்தார்கள். இப்போதும் செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்குச் சந்தர்ப்பத்தில் எனக்குத் தோன்றிய ஒன்றை இங்கு குறிப்பிடலாமென்று எண்ணுகிறேன். நாவலரவர்கள், சிவபூசை, மகேஸ்வர பூசை, சிவபுராணபடனம் முதலிய சிவதருமங்களுக்கு ஆதாரமாகிய சைவப்பிரகாச மடாலயம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக கல்லூரியே கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியிலே ஓர் நிலம் விலைக்கு வாங்கினார்கள். அன்னிய சாதனம் இது:

24—1—1918 உதயபானு 1-ம் நாள். 4-ம் இல. இருக்கிறபடி.

1874-ம் ஆண்டு ஆனிமீ 6-ம் தேதி தெபமரத்திலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையினுடைய ஸ்தாபகரும், அதிபதியுமாகிய கல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுக்கு கல்லூர் குடி சம்பலவர் கார்த்திகேயையராகிய நான் சாணி அறிதியுறுதி முடித்துக்கொடுத்தாவதானதாகிய முதலிசொமுமாட்டியான சாணி கல்லூர்வை கார்த்திகேயையர் பெண்சாணியம்மா பேரிற்றோடு அம்மையினுடைய மறு பிரிவிலும் நிலப்பரப்பு 5—குழி 12. சொட்டிலும் தலைவாசலும், பனை, செப்பியர் வான்பிக்கலும். எல்லை: கிழக்கு, காரியம்மா, வடக்கு ரோட்டு. மேற்கும் தெற்கும் கந்தசுவாமியார் கோயிற் சாணி. இந்தக் சாணியடங்கலையும் மேற்குறித்த நாவலரவர்களாலும், நாவலரவர்களுக்குப் பிற்காலம் அவர்களுடைய வித்தியாசாலைகளுக்கு அவர்களுடைய சிஷ்யபரம்பரையிலே அவர்களுடைய விதானப் பிரபாவம் அதிபதியாய் வருவோர்களாலும் நடாத்தப்படும் சிவபூசை, மகேசுவரபூசை சொற்றுப் சிவபுராண படனம் முதலிய சிவதருமங்களுக்கு ஆதாரமாகிய சைவப்பிரகாச மடாலய ஸ்தாபனத்தின் பொருட்டு இந்த நான் மேற்குறித்த நாவலரவர்களுக்கு அறுதியாக விற்ற வகையின் ரூ. 750, இந்த ரூபா எழுநூற்றைம்பதிற்கும் அறுதியாக விற்றுவிட்டேன். ஆறுமுக நாவலரவர்களுக்குக் கார்த்திகேயையர், தம் இந்தச் சாணி இவருடைய முதலிசொமு மாட்டியுமென்றும் யாதொரு பிசகு நடவலினாலேயும் கல்லூர் திருகெல்வேலி அங்கிலகுடையார் தர்ம பிரசித்தப் பட்டோலையும் சாணியின் முன்னுறுதியும் இத்திடவணைத்து இந்த அறுதியுறுதி முடித்துக் கொடுத்தற்குச் சாட்சி, குறித்த உடையார் ஆறுமுகம் வேலுப்பிள்ளை, கல்லூர் குடிகணபதியையர், வெங்கடேசையர், வண்ணார்பண்ணை குடி சின்னத்தம்பி கதிரிவேற்பிள்ளை, அவ்வூர் குடி மாப்பாணர் வைத்தியலிங்கம் இவர்கள் சாட்சியாக இந்தச் சாதனம். குறித்த நாவலரவர்கள் வசிக்கும் வீட்டிலிருந்து எழுதினது. யாழ்ப்பாணம் சொற்தாரிக சுக்தப்பட்சோதர (கையெழுத்து) கு. கார்த்திகேசையர் (கையெழுத்து). சாட்சி ஆ. வேலுப்பிள்ளை (கையெழுத்து) சாட்சி க. வெங்கடேசையர் (கையெழுத்து) சாட்சி சி. கதிரிவேற்பிள்ளை (கையெழுத்து), சாட்சி மா, வைத்திலிங்கர் (கையெழுத்து).

மேற் சொல்லப்பட்ட சாதனத்தைச் சொல்லப்பட்ட சொற்தாரிக சுப்பிரமணியர் சுக்தப்பட்சோதரனான் இந்தமுமுத்துக்கொடுத்த உறுதி முடிப்புக்காரனுக்கு இதில் கையொப்பம் வைத்த சாட்சிகாரர் முதலில் முற்றும் வரித்துக்காட்டியதின்பின் சொல்லப்பட்ட உறுதி முடிப்புக்காரனும் சாட்சிக்காரரும் என் முன்பாகவும், அவர்கள் ஒருவர்க்கொருவர் முன்பாகவும் குறித்தவிடமீ உ விடத்திலும் கையொப்பம் வைத்தார்கள். இவர்களை நானறிவேன். இந்தச் சாதனம் மூலப்பிரதிக்கு ரூபா 1-ம், இணைபிரதிக்கு ரூபா 4-ம் கொண்டு முத்திரையும் பலிகப்பட்டது. இதற்படிக்கு உறுதிப்படுத்துகிறேன்.

க. கந்தப்பசோதர, (கையெழுத்து)
யாழ், பிர. சொற்தாரிக.

மேற் சொல்லிய நிலத்தை விலைக்கு வாங்கிய சில வருஷங்களுள் நாவலரவர்கள் சிவபதம் அடைந்துவிட அவர்கள் மாணாக்காரனாகிய கல்லூர் க. சதாசிவப்பிள்ளை சென்னப்பட்டணத்திலும் சிறியரத்திலும் வசித்துக்கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள நாவலரவர்கள் வித்தியாதருமத்வையும் அதனை அடுத்த பிற தருமங்களையும் பரிபாலித்துவந்தார். அவர்கள் இந்தியாவிலே இருந்தவையில் நாவலரவர்கள் சுற்றாதவரையும், மாணாக்கர்களையும் பவர் ஏஜண்டாக நியமித்து அவர்களைக் கொண்டு நடப்பித்து வந்தார். அவர் தமது அந்திய காலத்தில் நாவலர் அவர்களுக்கும் வித்துவ சிரோன்மணி க. த. பொன்னம்பலபிள்ளை அவர்களுக்கும் மாணாக்காராகிய கல்லூர் த. கைலாசபிள்ளை அவர்களை 1897 ம் ஆண்டு நாவலரவர்களது யாழ்ப்பாண சைவப் பிரகாச வித்தியாசாலை அதற்குச் சேர்ந்த அசைவற்ற அசைவுள்ள ஆதனங்களையும் கட்டத்தி வரும்படி டிரஸ்டியாக நியமித்தார், அப்படி நியமித்த பதிநிரத்தில் 'யாழ்ப்பாணத்து கல்லூர்க் கந்த சுவாமி கோயிலின் தெற்கு வீதியில் திரு மடல் கட்டுவதற்காக ஆறுமுகநாவலரவர்களால் வாங்கப்பட்டு அவர்களுடைய அநுபவத்திலிருந்து அவர்களுக்குப் பிற்காலம் என்னுடைய அநுபவத்திலிருக்கிற நிலத்தையும் இதினுள்ள மனையையும் மேற்சொல்லிய ந. த. கைலாசபிள்ளையையே பார்வையிட்டு இவைகளிலிருந்து வரும் வருமப்படியைக்கொண்டு இத்திருமடத்து மந்தைகாடத்திவரவேண்டும்" என்பதாக எழுதிவைத்தார். எக்காரணம்பற்றியோ இம் மட தருமம் இன்றுவரை நடைபெறவில்லை. இப்போது கொண்டாட்டிருக்கும் நூற்றாண்டு பூர்த்தி விழாவுக்காக மடத்தைக் கட்டி நாவலரவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி இந்த நிலத்தில் அவர்கள் குறித்த சற்றருமகளை அதிலே நடக்குமபடி செய்வதாகவே நிறைந்ததாகும். இதை இடம் பொருள், வேல் எல்லாம் ஒருங்கமையப் பெற்ற அதன் தற்காலிக தருமபரிபாலகரும் அவரது சுற்றத்தவரும் பழைய மாணவர்களும் சிந்திப்பார்களாக!

மு. தம்பையாபிள்ளை.

4,000 பேரில் வாக்களித்த ஒருவர்

கொழும்பு, மகேஸ்வரி பகுதியில் மூடப்படுகின்ற கள், சாராயம் விற்கும் கடைகளை மீண்டும் திறக்க வேண்டும் என்று பலர் விண்ணப்பித்துக் கொண்டதின் பேரில், சென்ற புதன் கிழமை அதற்கான வாக்கெடுப்புக் நடைபெற்றது. ஆனால் 4,000 பேர்களில் வாக்களிக்க வந்தவர் ஒரே ஒருவர் தான். ஆகவே மேற் குடிவகைக் கடைகளை மீண்டும் திறக்கப்படுவது சம்பந்தமான ஆலோசனை கைவிடப்பட்டது. இலங்கை பூரண மது விலக்குச் சங்கத்தாரின் முயற்சியினாலேயே இவ்வித மான முடிவு ஏற்பட்டது.

தமிழ்—சிங்கள சுருக்கெழுத்துப் போட்டி

இலங்கை தொழில் கல்லூரி வருஷந்தோறும் மார்கழி மாதத்தில் தனித்தனி சிங்கள மாதத்திலும் தமிழிலும் சுருக்கெழுத்துப் போட்டிகள் நடத்திக்கொண்டு வருகின்றது.

ஒவ்வொரு போட்டியிலும் 1,500 ரூபா கொண்ட முதற் பரிசும் 500 ரூபா கொண்ட இரண்டாம் பரிசும் வழங்கப் பெறும். போட்டியில் பங்கு பற்றுவோர் கையாளும் முறைகள் நிறைவைவைகளாக இருந்தால் இலங்கை அரசாங்கம் அவற்றின் சில உரிமைகளையும் விலைக்கு வாங்கிக் கொள்ளும். பயிற்றுதற்குச் சாத்தியமான முறைகளைக் கொண்டு, தொழில் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழிலும் சிங்களத்திலும் சுருக்கெழுத்துப் பயிற்சியளிக்கும்

நியூயோர்க்கில் திரு. சேர்ச்சில்

திரு. வின்ஸ்டன் சேர்ச்சில் சென்ற புதன்கிழமை நியூயோர்க்கை வந்தடைந்தார். அவர் கப்பலிலிருந்து கரைக்குப் போகும்போது, அவரை எதிர்ப்போர் "எங்களுக்குச் சமாதானம் வேண்டும்; சோச்சிலுக்கு யுத்தம் வேண்டும்" என்றகூவினார்கள். பதினாயிரத்துக் கதிகமான ஜனங்கள் திரு. சோச்சிலைப்பார்க்கக் கூடியிருந்தார்கள்.

கிராம முன்னேற்றச்சங்கம் நோப்பாய் தெற்கு

இருபாலையிலுள்ள ஓர் சுடலைக்குப் பிரேதங்களைக் கொண்டுபோய்ச் சுடுதற்குத் தக்க பாதை இல்லாமல் அவ்வூர் வாசிகள் அநேக வருடங்களாகக் கஷ்டப்பட்டனர், பெரியார்கள் பலமுறை முயன்றும் பயன் பெறவில்லை. இப்போது கிராம முன்னேற்றச் சங்கம் மிகவும் ஊக்கங் கொண்டு அதற்குரிய காணிக்காரர்களின் மனப் பூர்வமான உதவியுடன் முக்காலமைல் நீளம் 8 முழ அகலமுள்ள ஒழுங்கையை அமைத்தது

இதைச் சென்ற 22-3-49 காலை 10 மணிக்கு வடமராண அதிபர் திரு P. J. கட்சன், வலி - கிழக்கு T. முருகேசபிள்ளை சோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. C வலன்டியசிங்கம் இன்னும் அவ்வூர் வாழுன பல ஆண்கள் பெண்களின் சமூகத்தில் திறந்து வைத்தனர். திரு. P. J. கட்சன் பொதுமக்கள் இப்படியான தங்கள் வேலைகளைத் தாங்களே முன்வந்து செய்தல் சிறந்த தென்றும், இது மிகப் பேற்றுத்தக்க செயல் என்றும், எல்லாத் தேவைகட்கும் அரசாங்கத்தை நம்பியிருந்தால், ஒன்றும் நிக்கிரம முடியாது என்றும் கூறினர். இன்னும் இதற்குரிய காணியைத் தரும சிந்தனையுடன் உதவிய பெரியார்கள் எல்லோருக்கும் தமது நன்றியைச் செலுத்தித் தாம அவர்களை மிகவும் பேற்றுவதாகவும் கூறினர். பின்பு சங்கச் சார்பாக திரு. சி. பாலசிங்கம் அவர் திரு P. J. கட்சன் அவர்கட்கும் திரு. T. முருகேசபிள்ளை அவர்கட்கும், காணியை நன்கொடையாகக் கொடுத்த பெரியார்கட்கும் ஏனைச் சமூகத்தந்த எல்லார்க்கும் நன்றி கூறினர்.

—சுடித

தந்தரோக சஞ்சீவி கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

ஒரு கிறாணுக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருகாலும் ஒரு சதவீதம் வைத்துக் கடைசியன்று வியாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெள்ளரிவிதோய்வது, பத்தியம்: புளையிலையாகாது. குடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும் வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல், இருமல் சுவாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாத முடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சுடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனேதேனை தணியும்.

வி. பி. பி. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

வெளிநாட்டிற்கு வி. பி. பி. இல்லை

விலாசம்:

ஆயுர்வேத
சிவசோதி மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

M 52 23-7-48—23-7-49 (வெ)

உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

கேசவன்: "அம்மா, நான்வந்த நோக்கத்தைச் சொல்லுகிறேன்; வந்தவிடத்தில் தாங்கள் என்னைக் கடிந்து கோபித்துப் பேசுகிறதென்ன நோக்கமென்று? அதை முந்திச் சொல்லுங்கள்.

பரமா: நான் உன்மேற்கோபித்தமைக்குக் காரணம் வேறொன்றுமல்ல; பிரான சிநேகிதராயிருந்தாலும் பெரும் பிழை செய்தவர்களுடைய தொடர்பை உடனுக்குடன் விட்டுவிட வேண்டியதுதானே முறை;

கேச: அதுதான் அம்மா செய்யவேண்டிய முறை; அப்படிச்செய்யவேண்டுமென்று எவர்தாம் சொல்லுவர்?

பத்மா: கேசவன் கேட்கிறேனென்று குறைவெண்ணுதே; மோகனாவும் நீயும் இப்பொழுது சந்தோஷமாகவிருக்கிறீர்களா?

கேச: அம்மா: அவளுந் தன்னளவிற் சந்தோஷமாக விருக்கிறாளென்றே நினைக்கிறேன்; நான் ஏன்னளவிற் பூரண சந்தோஷத்தோடுதான் இருக்கிறேன்.

பத்மா: மோகனா இப்பொழுது எங்கேயிருக்கிறாள்?

கேச: அவளே வீட்டிலேதான் விட்டுப் போனேன்; அவள் வீட்டிலிருக்கிறாளோ, அரச மரத்தின் கீழ் நிற்கிறாளோ, நான் அறியேன்; அவள் அறிவாள்; தெய்வமறியும்.

பத்மா: அவை கிடக்கட்டும்; உன்னுடைய நண்பர் சில நாட்களின்முன் உங்கள் வீட்டிற்கு வந்ததுண்டோ?

கேச: என்னுடைய நண்பர் என்றது ஆரை, அம்மா.

பத்மா: (பெயரைச் சொல்லக் கூசியவளாய்ச் சற்றநேரம் பேசாமற் பின்னர் அவனைப்பார்த்து)உன் நண்பர் யாரென்பது உண்மையாக விளங்கவில்லையா?

கேச: ஆரையம்மா, பாஸ்கரனைக் குறித்தா கேட்கிறீர்கள்? ஐயோ! காலம் இப்படியும் மாறிவிட்டதே; அவர் என் வீட்டிற்கு வந்ததுண்டு.

பத்மா: அவர் வந்தபோது உங்கள் வீட்டில் ஏதும் விசேஷம் நடந்ததோ?

கேச: அவர் வந்ததே எனக்கு ஒரு விசேஷம் அம்மா.

பத்மா: கேசவன் ஒன்றையும் ஒளியாமற் சொல். உன் நண்பர் மாசனத்தில் மானத்தைக் கெடுக்கத் துணிந்தாராமே? நீயும் அதற்கு உடன்பட்டாயோ? கிசந்தானு?

கேச: அம்மா, அந்த மோகனாவிடத்திற் ஏதும் மானம் இருந்தற்றானே, யாருங் கெடுக்கமுடியும்? அவளிடத்தில் மானம், ஊனம் ஞானம், ஞானம் என்றவற்றைபிட்டு எவ்வகையான உணர்ச்சியு மில்லையமா; அவள் விஷயமாக உங்களோடு நான் ஏதாவது பேசுவது எனக்கு மரியாதையல்ல அமா; நான் சொன்னவுமா கேட்பது உங்களுக்குக் கௌரவமல்ல.

"தீயாரைக்காண்பதுவும் தீதேநிருவற்றதீயார்சொற் கேட்பதுவும் தீதேதீயார் தனங்களுரைப்பதுவும் தீதே அவரோடுணங்கி யிருப்பதுவுந் தீது"

என்ற ஔவையார் பாடல் நீங்கள் படியாததல்ல அம்மா. (வரும்)

பொலிசரைக் குற்றியதற்குச் சிறைத் தண்டனை

கண்டியில் ஒரு பொலிஸ் பரிசோதகரையும் ஒரு சார்ஜியும் இன்னொரு பொலிசையும் கத்தியாற் குற்றி வாதவினைத்தனென்ற குற்றத்தின்பொருட்டு கண்டி மேற் சீமிலந்தலத்தில் விசாரணை செய்யபின், வட்டகாம என்னுமிடத்தைச் சேர்ந்த உலியலியம் அப்புஹாமி என்பவர்க்கு 2 வருடங் கடுஞ்சிறை விதிக்கப்பட்டதோடு பின்னும் இரண்டு வருட காலம் பொலிசர் மேற்பார்வையில் இருக்கவேண்டு மெனவும் தீர்ப்பளிக்கப்பட்டான்.

உலகம் பலவிதக் கதையைப் பற்றிய அபிப்பிராயம்

ஐயா,

தாங்கள் இந்துசாதனப் பத்திரிகையிற் பிரசுரித்து வருகிற உலகம் பலவிதமென்னுங் கதையைக் கிரமித்துவருகிய நானும் உறவினர்களும், மற்றும் கிரமித்த சகோதரிகளும் வாசித்தறியும்படி தங்கள் பத்திரிகையை உதவிவரும் நண்பரி ஹு. நடராசா அவர்களுக்கு நான் நன்றி பாராட்டுகிறேன். நவநாகரீகக் கொள்கையை அனுபவ வாயிலாக அறிந்து சீர்ப்பெறுகவண்ணம் நல்ல நெறியில் ஒழுகாமற் உலகத்தோர்க்கு அறிவைப் புகட்டும்முறையில் எழுதிவரும் நங்கள் கதையை வாசிப்பவர்களுக்கு, அறிவும் பழக்க வழக்கங்களில் தகுந்த திருத்தமும் நல்ல குணமும் உண்டாகுமென்பது எனது பூரண நம்பிக்கை. இன்னும் இந்தகைய அறிவு வளருங் கதைகளை யெழுதி எம்மை மகிழ்விப்பீர்க ளெனத் தங்களைக் கேட்டு தங்களுக் கதன்புரியும்படி தேவனைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்

ம. க வி. பிரஞ்சிப்பிள்ளை

72 Temple Road
Nallur South, Jaffna

நமது சோதிடப் பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (27—3—49——2—4—49 வரை)

மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

நீங்கள் எதிர்பார்த்திராமலே எதிர்புகளும் பகைகளும் ஏற்படலாமானாலும், இவ்வாரத்தில் நிலைமைகள் அபிவிருத்தியடையும். உங்களைச் சூழ்ந்துள்ளவர்களிடமிருந்து பலன் அதிகமாக எதிர்பார்க்கவேண்டாம். உங்கள் தெய்வீகத் நீங்களே முயலவேண்டும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள், ரோகிணி, மிருகசிரிடம் 1, 2

புதிய திட்டங்களை நடைமுறையில் கொண்டுவருதற்கு இவ்வாரம் மிகச் சிறந்ததாகும். விவாகமாகாத வாலிபராயின், விவாகம் நடைபெறுதற்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்க்கலாம்.

மிதுனராசி மிருகசிரிடம், 3, 4, திருவாதிரை புனர் பூசம் 1, 2, 3,

அதிக செலவுகளுக்குரியதாயினும் இவ்வாரம் உங்களுக்கு அசாதாரண மான கலையைச்செய்யும் சந்தர்ப்பங்கள் தரும். இவ்வாரத்தில் பகைவர் விஷயத்தில் கடுமையாக வார்த்தை விடவோ எழுதவோ வேறும் சந்தர்ப்பத்தில் பொறுமையாக நடந்துகொள்ளவும்.

கடகராசி புனர்பூசம் 4-ம் பாதம் பூசம், ஆயிலியம்

இவ்வாரத்தில் ஒவ்வொரு சுருமும் சாதகமான நிலைமையை அடையும். ஆனால் வாரத்தின் முதலிரு தினங்களையும் அவதானமாகக் கழிக்கவும். அதன்பிறகு நீங்கள் எப்புதிய நிட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவரலாம்

சிங்கராசி மகம் பூரம் உத்தரம் 1-ம் பாதம்

நீங்கள் கஷ்டப்படும் சொந்தங்களுக்காக நீங்கள் ஏதாவது பிழையிருக்கவேண்டும். அல்லது, நீங்கள் மற்றவர்களை அதிகமாக நம்பியிருக்கிறீர்கள் என்றே சொல்லவேண்டும். உத்தியோகஸ்தராயின், காரியாலயத்தில் செல்வாக்கு, புதன் கிழமைகளில் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும்.

கன்னிராசி உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2-ம் பாதம்

இவ்வாரத்தில் சுற்றத்தவரால் சில தொந்தரவுகள் ஏற்படலாம். ஆனால் காரியாலய, தொழில் சம்பந்தமான விஷயங்கள் அதிக முன்னேற்றமடையும். வியாழனும் வெள்ளியும் நண்பர்களோடு தப்பிப்பிழையாய் கொள்ளாது நடந்துகொள்ளவும்.

துலாம் சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்

ஆத்திரப்படுத்தி எதையும் செய்துவிடாமல் அமைதியையும் பொறுமையையும் கையாளவும் சென்ற சிலமாதங்களாக உங்களுக் கிருந்துவந்த எதிர்புகள் இவ்வாரத்தில் மறைந்துபோகும். திடீரென்று ஓர் நிர்மானத்துக்கு வரவோ, கருமங்களில் தலையிடவோ வேண்டாம். வாரத்தின் கடைசி தினம் அவதானமாய்க் கழிக்கப்படவேண்டியது.

விருச்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம் கேட்டை

இவ்வாரத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கிறீர்களோ அவ்வளவுக்கு உங்களுக்கு லாபமுண்டாகும். குழந்தைகளி லகப்படாம லிருக்க முயலவும். குடும்பத்தில் ஏற்படும் சிறு கலகங்களால் உங்களுக்குச் சலனம் தரும்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்

இவ்வளவு காலமும் உங்களைச் சூழ்ந்திருந்த தெளிவற்ற நிலைகள் இவ்வாரத்தில் நீங்கி, நல்ல நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும். இது வரை நீங்கள் அநுபவித்த சுதந்திரம், மகிழ்ச்சி என்பனவற்றிலும் அதிகமாக இனி நீங்கள் அநுபவிப்பீர்கள், உங்கள் திட்டங்களை நடை முறைக்குக் கொண்டுவரலாம்.

மகரராசி உத்தராடம் 2, 3, 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

உங்கள் நண்பர்களின் உதவியோடு நீங்கள் உங்கள் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வர முடியும். அசைவற்ற சொத்துக்கள் பரிமாற்றங்களினால் அதிக லாப முண்டாகும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம்பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

இவ்வாரத்தில் சந்தோஷகரமான அல்லது நிர்மானமற்ற வழி வகைகள் உங்களைத் தொர்தரவு படுத்த இடங்கொடுக்கவேண்டாம். புதிய முயற்சிகளுக்குகந்த வாரமன்று.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

புது முயற்சிகளி லீடுபடச் சிறந்த வாரம்; அதினால் ஒப்பார்தம் முயலுவற்றில் அதிக லாபம் ஏற்படும், வாரத்தின் பின் பகுதியில் காரியாலயத்திலேற்படும் நிறிய தொந்தரவுகளைத் தவிர்த்து, நண்பர்களோடு தப்பிப் பிராயம் கொள்ளாது நடந்து கொள்க.

நல்ல செய்தி

எங்கள் மருந்துச்சாலையின் கிளை ஸ்தாபனம் ஒன்று
யாழ்ப்பாணம், கல்லூரிடி, கல்லூரியார் தெரு, 76/3-ம் நம்பர் கட்டடத்தில்
திறந்துள்ளோம் என்பதைப் பொது ஜனங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்

விசேஷ அம்சங்கள்:

1. எங்கள் சிகிச்சை முறைகள் முழுவதும் ஆயுர்வேத முறையை அடிப்படையாகக் கொண்டன.
2. எங்கள் மருந்துகள் எல்லாம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுவன.
3. எங்கள் தலைமை ஸ்தாபனத்திலேயோ அன்றிக் கிளை ஸ்தாபனத்திலேயோ நாட்பட்ட வியாதிகள் எவைக்கும் சிகிச்சை அளித்தும் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்.
4. வாதம், பாரிச வாதம் முதலிய நோய்களுக்குரிய மலையாள சிகிச்சை முறைகள் சிறந்த அநுபவஸ்தர்களால் கையாளப்படுகின்றன.
5. நோயாளர் எம்மிடம் சிகிச்சை பெற்றாலும் பெறாவிட்டாலும் நாங்கள் எந்த வியாதியைச் குறித்தும் யோசனை சொல்வோம்.

ஆலோசனை நேரம்:

காலை 7 மணி முதல் 12 மணிவரை
பி. ப. 4 ,, ,, 7 ,,

THE ARYA PHARMACY
(128, புதிய சோனகதெரு, கொழும்பு)
76/3 கல்லூரியார் தெரு, :: கல்லூரிடி, யாழ்ப்பாணம்.

திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

சனி மார்ச் 26

காலை 7 10 தோரம்பம்* 7 15 தமிழில் செய்திகள் 7 30 ஷேர்லா ஆர். சோபால் காவர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 5 தஞ்சாவூர் எம். பத்மாபான் வயலின் 8 30 காலை இசை 9 முடிவு.

1 தஞ்சாவூர் எம் பத்மாபான் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2 10 தமிழில் பேச்சு 2 20 ஐரோப்பிய சங்கீதம் * 2 45 முடிவு.

மாலை 5 கே. ஆர். வெங்கிடாசலம் பாட்டு 5 40 சர்தார் ரேவாரம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 நிராம கிழச்சிகள் 7 ஷேர்லா ஆர்,சோபால் காவர்பாட்டு 7 15 தமிழில் செய்திகள் 7 30 செய்தி விளக்கம் 7 45 என் வி வசந்தகோகிலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனி லிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 கே. ஆர். வெங்கிடாசலம் பாட்டு 10 இசைவேளை 10 30 முடிவு.

ஞாயிறு மார்ச் 27

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்திகள் 7 30 வி ஏ சாம்பசிவன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 காலை துதி* 8 30 ஆர். கமலாவதி கிருஷ்ணமூர்த்தி வீணை 9 முடிவு.

12 தம்பம் * 12 30 ஸ்ரீமான் அருணாசலம் ஆரோக்கியவழி கொடர்ச்சித்தரம் 12 45 ஜோதி வாவு கலிதைகாட்சி 12 50 வீட்டுக்கு வீடு நாடகம் 1 மணிவரர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஆலத்தூர் சகோதரர்கள் ஒலிப்பதிவு 2 தமிழில்செய்திகள் 2 10 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை * 3 முடிவு

மாலை 5 வி. ஏ. சாம்பசிவன் பாட்டு 5 40 தேவாரதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 நிராம கிழச்சிகள் 7 ஆர். கமலாவதி கிருஷ்ணமூர்த்தி வீணை 7 15 தமிழில் செய்திகள் 7 30 ஆர். கமலாவதி கிருஷ்ணமூர்த்தி வீணை 7 45 புத்தக விமர்சனம் 8 நாகமா, கமலா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல் வளை* 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 கே என் சின்னி கிருஷ்ண ராவு வஹ்ஹு (சினிமா மெட்டுகள்) 10 இசைவேளை 10-30 முடிவு.

திங்கள் மார்ச் 28

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில்செய்திகள் 7 30 நிருராமேஸ்வரம் ஆர் மீனாக்ஷிசுந்தரம் கிருஷ்ண மூர்த்தி சகோதரர்கள் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் (ம. ப. பெரியசாமித்தூரன் பாடல்கள்) 8 30 திருக்கோயிலூர் எஸ். அலமேலு பாட்டு 9 முடிவு

1 தம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 10 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 நிருராமேஸ்வரம் ஆர். மீனாக்ஷி சுந்தரம் கிருஷ்ணமூர்த்தி சகோதரர்கள் நாகஸ்வரம் 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 நிராம கிழச்சிகள் 7 சிற்சானம் * 7 15 தமிழில் செய்திகள் 7 30 சிற்சானம்* 7 45 சட்டம்தெரியுமா? 2 பதிப்புரிமை வழக்கறிஞர் பேசக 8 திருகோடிகாவல் ஆர். கோவிந்தராஜ பிள்ளை பாட்டு 8 30 திருச்சி வாத்யவோஷ்டி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 புல்லாங்குழல் * 10 இசைவேளை * 10 30 முடிவு.

செவ்வாய் மார்ச் 29

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்திகள் 7 30 பி. ஆர். சிவசங்கரம் பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 குன்னக்குடி வெங்கடராமய்யர் * 8 30 எம். கே. கமலகுமாரி பாட்டு 9 முடிவு.

1 தம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 நெம்பரம் எஸ். செல்வராத்தினம் பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 10 நெம்பரம் எஸ். செல்வராத்தினம் பிள்ளை பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 வானாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 நிராம கிழச்சிகள் 7 00 வானாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 7 15 தமிழில் செய்திகள் 7 30 இலக்கியவாசகம்பொருராற்றுப்படை 7 45 தஞ்சாவூர் கே பி சிவானந்தம்பிள்ளை வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஹஜ்ஜு * 9 30 லண்டனி லிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 பி. ஆர் சிவசங்கரம் பிள்ளை பாட்டு 10 நீங்கள்கேட்டவை* 10 30 முடிவு.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விதித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட கேஷமப்பணம்

ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்றபடி வட்டியும் முறையே 1 விதம், 2 விதம் 4 விதம் 6 விதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "காஷலன்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராசியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாவோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

சுகைகள் நடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
கிருப்பர்.

Std 14 20-11-46—20-11-49

பிரகடனம்

மயூரகிரிப் புராணம்

வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை செய்த பொழிப்புரை, ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய விசேடவுரை, வித்துவிநோ மணியின் வரலாறு, பிரதிமைப் படம் முதலியவற்றுடன்; கந்த சஷ்டிகாலத்திற் படனஞ்செய்யப்படுவது ரூ. சத. 1—50

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம்

திருவாசகத்திரட்டுடன், மேற்படி பண்டிதர் எழுதியது; சைவப்பாடசாலைகளிற் சமய பாடமாகப் பயிற்றப்படுவது ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I.
(கோபால நேசாந்தினம்)

ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது ரூ. 1—25 ச.

உலகம்பலவிதக்கதை 2
(துரைராத்தினம் நேசமணி)

சதம் 75

மயானகாண்டம் (உரையுடன்)

சதம் 75

ஊறபனா மனுப்புவோர்க்குத் தபாற்செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply to:
PANDIT V. T. SAMBANDHAN,
Vannarponnai, Jaffna.

சைவ சமய நுண்மை

1-ம் பக்கத் தொடர்ச்சி

தீர்க்கும் ஆண்டவன் அன்றும் இன்றும் என்றும் உண்டு என்று நாம் கருதுகிறோம். வெறுமனே சைவசமயம்.

கேள்வி: இதரசமய வாதிகளும் ஆண்டவன் உண்டு என்றும், நியாயத்தீர்ப்பு உண்டு என்றும் தானே சொல்லுகிறார்கள்.

பதில்: அவர்கள் சொல்லுகிற நியாயத் தீர்ப்புக்கும், சைவசமயிகள் சொல்லுகிற நியாயத் தீர்ப்புக்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

கேள்வி: நியாயத் தீர்ப்பு நியாயமாகத்தான் இருக்கும். வித்தியாசமாக எப்படி இருக்க முடியும்?

பதில்: ஆண்டவனுடைய தீர்ப்பு நியாயமாகத்தான் இருக்கும். சைவசமய தவர் சொல்லுவது நாம் இப்பொழுது பிறந்திருப்பதே, நாம் முன்செய்த வினைகளுக்கேற்கிய நியாயத் தீர்ப்பின் காரணத்தாலதான் என்பது ஒன்று இனி நாம பிறப்பதும் பிறவாமல் இருப்பதும், புகழுடன் வாழுவதும், இழிவுடன் வாழுவதும், துன்பப் படுவதும் இன்பப் படுவதும், நோயோடு இருப்பதும், ஈரோடு திருப்பதும், நீடித்த வாழ்வதும், குறைந்த வாழ்வோடு இறப்பதும் நாம் இப்பொழுது செய்கின்ற வினைகளுக்குத் தகுந்தபடி நியாயத் தீர்ப்பு நடந்து அதனடியாகவேற்படும் என்பது மற்றொன்று.

கேள்வி: இதர சமய வாதிகள் நாம இப்பொழுது பிறந்திருப்பது நாம் முன் செய்த வினைகளுக்கு ஏற்றபட்ட நியாயத் தீர்ப்பு அல்லவென்றும், நாம திரும்பவும்வினைக்கிடங்கிப் பிறக்கப் போவதில்லை யென்றும் சொல்லுகிறார்களே. இதில் உண்மை எதுவென்று எப்படி நாம அறிந்துகொள்வது?

பதில்: அதுவா! உலகத்தில் ஏழை என்றும், பணக்காரனென்றும், அரசன் என்றும், ஆண்டி என்றும், அழகன் என்றும், அலன் என்றும், ஆண் என்றும், பெண் என்றும், அலகப் பழுதன என்றும் பலதரப்பட்ட மனிதர்களைப் பார்க்கிறோம். கடவுள் கருணாமூர்த்தி என்றதானே எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். கருணையுள்ள ஒருவர் இவ்வளவான ஜெனமங்களைக் காரணம் இல்லாமல் ஏற்ற வித்தியாசமாக, வேஷ பாதகமாகப் படைத்திருப்பாரா?

கேள்வி: அது அவருடைய விருப்பம். அவரைக் கேட்க யாரால் முடியும் என்கிறார்களே.

பதில்: அப்படியல்ல. ஒவ்வொரு ஜெனமத்திலும், நாம செய்கின்ற வினைக்குத்தக்க நியாயத் தீர்ப்பு நடந்துதான் நாம் பிறக்கிறோம். ஒரு ஜெபிலுக்குள் பலகைதிகள் பலதரப்பட்ட தண்டனைகளுள் இருந்தால் அந்தத் தண்டனை ஒவ்வொன்றும், அவரவர் செய்த குற்றத்தகுநியாயவிசாரணை செய்த தீர்ப்பின் பயனாய் ஏற்பட்டது என்று சொல்லுவது சரியா? அல்லாவிட்டால் நியாயாதிபதியின் விருப்பமபோல ஜெயிலில் போட்டிருக்கிறார், அவரைக் கேட்க யாரால முடியுமென்று சொல்லுவது சரியா?

கேள்வி: நல்ல உதாரணம் சொன்னீர்கள். எல்லாம் குற்றத்திற்குத் தகுந்த தீர்ப்புதான் நடக்குமேயானால் குற்றமில்லையே விசாரணையும் தீர்ப்பும் வேறு இரண்டுமே கிடையாதுதான், எச்சமயத்தவரும் இந்த உண்மையை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாதே

பதில்: இவ்வுலகத்தில் இப்பொழுது காணப்படுகின்ற வேறுபாடுகளுக்கு காரணம் அவரவர் முன் செய்த வினைக்குத் தகுந்த நியாயத் தீர்ப்பு ஆண்டவனால் கொடுக்கப்பெற்றதுதான் என்ற சைவசமய நுண்மையை சைவ சமயத்தைச் சார்ந்த அநேகர் விளங்கிகொள்ள முடியாதிருக்கும்போது, பிறசமயத்தவர் உடனே ஒத்துக் கொள்ளுதாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், மேலநாட்டு விஞ்ஞானிகளில் பலர் அதை ஒப்புக்கொண்டு புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள்.

கேள்வி: எப்படி? மேல்நாட்டு அறிஞர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்களா? சைவசமயத்திற்கு நல்ல காலம் பிறந்துவிட்டது போலிருக்கிறதே.

பதில்: அதில் என்ன சந்தேகம். மனிதன் மனிதனாகப் பிறக்கும் முன் புல்லாகிப் பூடாகிப், புழுவாய், பறவையாய், மருகமாய், பிறந்துதான் வந்திருக்கிறான் என்று டார்வின் என்ற விஞ்ஞானி ஆராய்ச்சி செய்து நமது சைவசமய உண்மையை ஒப்புக்கொண்ட பினனும் "படைத்தான் படைத்த படைப் பெல்லாம் மதுவுக்கரக" என்று ஒரு சைவ சமயத்தவன் சொல்லலாமா?

கேள்வி: சொல்லவே படாது.

பதில்: அதுமட்டுமா Shaw Desmond என்ற அறிஞர் Reincarnation for every man ஒவ்வொரு மனிதனுக்கும் முன் பிறப்பும் மறுபிறப்பும் உண்டு என்று ஒரு விரிவான புத்தகம் எழுதி அதில் பிபிலிய வேதத்திலிருந்தெல்லாம் மேற்கோள்களைகொடுத்திருக்கிறார்.

கேள்வி: அப்படியானால் சைவசமயத்தின் நுண்மை மேலநாட்டிலபரவ ஆரம்பித்துவிட்டது என்று தான் சொல்லவேண்டும்.

பதில்: அதனாலேயே சைவசமய நுண்மையை விதந்து "செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும் மெய்வகையால் நான்காகும் விதந்தபொருளெனக்கொண்டே இவ்விலபல சைவ நெறி யலவாறாகு மில்லையென உலகைகவரற பொருள் சிவனென்றருளாலவுணர்ந்தறிதரா" என்று அருளினார் சேக்கிழார் பெருமானும். சைவ சமயத்தன்னுடைமைகளைத் தெளிவாகத் தெரிய வேண்டுமானால் தமிழ் வேதமாகிய விஞ்ஞானபோதம், விஞ்ஞான சித்தியார் முதலிய சித்தாந்த நூல்களை உணர்ந்து அறிந்துகொள்ளலாம்.

கேள்வி: இதைக் கருத்துகளைக் கொண்டுதான் சிவஞான சித்தியாரில்

"வாழ்வெனு மைவல் விட்டு
வறுமையைஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ்
சைவமாஞ் சமயஞ் சாரும்
வாழ்பெற லரிதுகாலை
வுயர்சிவ ஞானத்தாலே
பேரிள மதியினானோப்
பேறுறவா ருளர் பெற்றாரே"

என்று பாடியிருக்கிறார்களோ? அந்நூலை நன்றாய்ப் படித்துவிட்டுப் பின்னர்ச் சந்திக்கிறேன் ஐயா!

பதில்: ஆமாம் அப்படியே செய்வோம்.

R. K. சித்த வைத்தியசாலை

நல்லூர்—கைலாசபிள்ளையார் கோயிலடி

இராமேசுவரத்தில் அரசாங்க உதவியோடு பலவருடங்கள் எமது வைத்தியசாலையை நடாதியபோது சுகாதாரமந்திரி Dr. T. S. S. ராஜன், கலெக்டர் செட்டூர் தலைவர் சத்தியமூர்த்தி முதலிய பலர் வியந்தெழுதிய 1000-க் கணக்கான சான்றுகள் உள.

எந்த வியாதிக்கும் தக்க ஆலோசனை கூறப்படும்

வைத்தியர் K. S. பரிபூரணநந்தா
Regd. Medical Practitioner, (Madras)

அகில இலங்கைச் சித்தவைத்திய சங்கத் தலைவர்—யாழ்ப்பாணம்.

Std 4 12-11—12-6-49

ஸ்ரீ

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

குடமுழுக்கு விஞ்ஞாபனம்

திருவருளை முன்னிட்டு, அந்துவரும் விரோதிவருஷத்தில் துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோயிற் குடமுழுக்கேகம் செய்யவேண்டி இருப்பதால், ஷை கோயில் திருப்பணிகளைப் புதுக்கிச் செய்தற்கு சுமா 25000-00 வரையில் மதிப்பிடப்படுகின்றது. இருப்பிற் பணம் [illegible]வரா இருந்தாலும், அன்பர்கள் தங்களாலியன்ற பணஉதவி புரியுமாறு வேண்டுகின்றோம்.

பணம் அனுப்பும் அன்பர்கள் கௌரவதனாதிகாரி C. மாணிக்கவாசகரவர்களின் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்க.

மேலும் நேர்முகமாகப் பற்றுச்சீட்டினை வருபவர்களிடமும் பணத்தைக்கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச் சீட்டில்லாரிடம் பணம் கொடுக்கவேண்டாம்.

பணம் அனுப்பும் விலாசம்:

C. மாணிக்கவாசகர்,
கௌரவ தனாதிகாரி,
புலோலி, பருத்தித்துறை.

இங்ஙனம்,
M. செல்வத்துரை,
கௌரவ காரியதரிசி,
துன்னாலை.

Std 9 25—1—49—22—4—49.

பவுண்மார்க் ஓடுகள்

வந்துவிட்டன! வந்துவிட்டன!

யாவரும் நன்கு மதித்து வாங்கிப் பாவித்து வந்த பிரசித்தி பெற்ற பவுண்மார்க் ஓடுகள் இப்போ எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சிலர் பவுண்மார்க் ஓடுகள் எனச் சொல்லி விற்கும் ஓடுகளை எங்கள் பவுண்மார்க் ஓடுகள் என நினைத்து ஏமாந்து போகாமல் எச்சரிக்கையாயிருக்கும்படி யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்

பவுண்மார்க் ஓடுகளின்
ஏசண்டுகள் நாங்களே

சி. விநாயகர்ப்பிள்ளை அண்டு சன்ஸ்
M 10 14—2—14-5-49 யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கச் கட்டளைச் சட்டதின்படி சட்டபூர்வமாக [illegible]ணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா 4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	,, 3, 000, 000, 00
சேமநிதி	,, 2, 600, 00, 000

தலைமைக்காரியாலயம்:- [illegible], கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்: [illegible]
லண்டன ஏஜெண்டுகள்:- [illegible]
கிளைக்காரியாலயங்கள்:- [illegible]கோட்டை,(கொழும்பு) கண்டி, காம்.
திருகோணமலை, மாவுந்துறை, குருநாகல்
(மலையநாராண்டபம்),பதுளை ட்டி கனப்பு.
யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242ஆம்பந்தரிரோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரகளுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு:	இலங்கையில் (திருகோணமலை வதிவு மட்டக்களப்பு ஒழிந்த) மன எல்லைப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொடுக்கப் பெற்றுக் கொள்ளப்படும்.
சேமிப்புப் பணம்:	ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி ஆண்டுக்கு வருடம்தோறும் 1½ விதம் கேட்டோரும் திருப்பிக் கொடுக்கப்படும்.
நிரந்தர சேமிப்பு:	இதற்கான விதிகள் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.
பிறநாட்டுவங்காரப்பணி: இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு

Std. 54[illegible]—48—30-7-49

Printed and Published by S. P. KANDIAH, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Friday March 25, 1949